தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041–பங்குனி 12

2010 மார்ச் 26, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை *9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. சி. குழந்தைவேலு அவர்கள் *14–1–2010* அன்றும், திரு. ப. இராஜரெத்தினம் அவர்கள் *4–2–2010* அன்றும், திரு. உ.ரா. வரதராஜன் அவர்கள் *13–2–2010* அன்றும், திரு. ஏ. சுடலைமுத்து அவர்கள் *22–2–2010* அன்றும், திருமதி வி.ப. பழனியம்மாள் அவர்கள் *2–3–2010* அன்றும், திரு. ச. அழகுவேலு அவர்கள் *5–3–2010* அன்றும், திரு. மே.அ. இராசகுமார் அவர்கள் *9–3–2010* அன்றும் மற்றும் திரு. வீ. சுப்பிரமணியன் அவர்கள் *12–3–2010* அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2010 மார்ச் 26

திரு. சி. குழந்தைவேலு அவர்கள் குளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1991 முதல் 1996 வரை சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ப. இராஜரெத்தினம் அவர்கள் பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2001 முதல் 2006 வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள். மேலும், இவர் 1998 முதல் 1999 வரை பெரம்பலூர் தொகுதி பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. உ.ரா. வரதராஜன் அவர்கள் வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. ஏ. சுடலைமுத்து அவர்கள் போடிநாயக்கனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1996 முதல் 2001 வரை சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திருமதி வி.ப. பழனியம்மாள் அவர்கள் தாராபுரம் தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ச. அழகுவேலு அவர்கள் கண்டமங்கலம் தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. மே.அ. இராசகுமார் அவர்கள் மருங்காபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1980 முதல் 1984 வரை சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. வீ. சுப்பிரமணியன் அவர்கள் கண்டமங்கலம் தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1985 முதல் 1988 வரை, 1991 முதல் 1996 வரை

மற்றும் 2001 முதல் 2006 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், இவர் 19–5–2001 முதல் 1–3–2002 வரை தமிழக அமைச்சராகவும் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று, அமைதி காத்தனர்.)

முற்பகல் 9–35

2. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று (26–3–2010) வெள்ளிக்கிழமை, முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32–ஐ இன்று (26–3–2010) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.